**தலைப்பு 335 – தேசிய கல்வி ஆணைக்குழு**

------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 335 – தேசிய கல்வி ஆணைக்குழுவின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் தேசிய கல்வி ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2023 மே 15 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் தேசிய கல்வி ஆணைக்குழுவிற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 மே 26 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தேசிய கல்வி ஆணைக்குழுவின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய

வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் தேசிய கல்வி ஆணைக்குழுவினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் நேரொத்ததாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

**(அ) ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| நிதி நிலைமைக் கூற்றில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி ரூபா 44,193,169 ஆக காண்பிக்கப்பட்டிருந்ததுடன் திறைசேரியின் CIGAS நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அப்பெறுமதி ரூபா 46,619,220 ஆக காண்பிக்கப்பட்டதன் காரணமாக ரூபா 2,426,051 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு திறைசேரியின் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும். | திறைசேரியின் பெறுமதிகளுடன் இணங்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும். |

**(ஆ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணிச் செல்லப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (i) பிணைப் பதிவேடு | | |
| நிதிப் பிரமாணம் 891(1) இன் பிரகாரம் பிணைவைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் தகவல்களை உள்ளடக்கிய பிணைப்பதிவேடு தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | பிணைப் பதிவேடு எதிர்காலத்தில் பேணிச்செல்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) அடியிதழ் புத்தகப் பதிவேடு | | |
| நிதிப் பிரமாணம் 341 இன் பிரகாரம் அடியிதழ் புத்தகங்கள் நாளதுவரையாக்கப்பட்டிருக் கவில்லை. | அடியிதழ் புத்தகப் பதிவேட்டை நாளதுவரையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| கட்டிடங்களைப் பழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தல் செலவின விடயங்களுக்காக நிதி ஏற்பாட்டுத் தொகையில் 98 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. | கட்டிடத் திருத்தம் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகள் கட்டிட உரிமையாளர் தரப்பினரால் மேற்கொள்ளப்படுவதுடன் கட்டிட வாடகை மூலம் இந்த செலவினங்கள் வேவுகை செய்யப்படுகின்றமையால் இந்த செலவின விடயங்களில் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. | இயலுமான வரை சரியாக செலவின மதிப்பீடு தயாரிக்கப்படல் வேண்டும். |

## 2.2 கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆவது பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரால் கீழே குறிப்பிடப்படுகின்ற விடயங்கள் தொடர்பாக உறுதிப்படுத்த வேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின்/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | தேசிய கல்வி ஆணைக்குழுவின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப் பாட்டு முறைமையொன்றைத் தயாரித்து பேணிச் செல்லவேண்டியமை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அந்த முறைமையின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வினைச் செய்து அதன் பிரகாரம் முறைமையை ஆக்கபூர்வமானதாக கொண்டு செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ள வேண்டியிருந்தால் அந்த மீளாய்வினை எழுத்து மூலம் மேற்கொண்டு அதன் பிரதியொன்று கண்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கவேண்டிய போதிலும் அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டமைக்கான கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | உள்ளகக் கணக்காய்வு கூறினை ஸ்தாபித்து தேவையான செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு 2021 ஆம் ஆண்டின் போது நடவடிக்கை எடுக்கப்பட்ட போதும் 2022 ஆம் ஆண்டில் ஏற்பட்ட எரிபொருள் பற்றாக்குறை, இடையிடையே சேவைக்கு அறிக்கையிடுதல் போன்ற இடையூறுகளின் காரணமாக தொடர்ச்சியாக நடாத்திச் செல்வதற்கு முடியாதிருந்தது. தற்போது அந்த முறைமையை தொடர்ச்சியாகப் பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. உரிய மீளாய்வு ஆறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரத் திட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | உள்ளகக் கணக்காய்வு இலக்குகளை சரியான பிரகாரம் அமுல்படுத்துவதற்காக ஆக்கபூர்மான திட்ட முறைமையொன்று உள்ளமையை உறுதிப்படுத்த வேண்டியிருந்த போதும் அறிக்கையின் 4.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் பிரகாரம் அந்தத் தேவை நிறைவேற்றப்பட்டிருக்க வில்லை. | 2022 ஆம் ஆண்டில் நாட்டில் ஏற்பட்ட எரிபொருள் பற்றாக்குறை இடையிடையே சேவைக்கு அறிக்கையிட்டமை போன்ற இடையூறான நிலைமை எழுந்தமையின் காரணமாக கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் ஒரு தடவை மாத்திரம் நடாத்துவதற்கு முடியுமாக இருந்தது. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 41 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வு பரிசேதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்ப்பிக்கப்படுகின்றது.

| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள்** | **இணங்காமைகள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| 2016 திசெம்பர் 29 ஆம் திகதி இலக்கம் 30/2016 என்ற அரச நிர்வாக சுற்றறிக்கையின் 3.1 ஆம் பிரிவு | ஆணைக்குழுவிற்குரிய 06 வாகனங்களுக்கு உரிய சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குழாம் வாகனங்களின் எரிபொருள் எரிவு தொடர்பான பரிசோதனை ஒழுங்குமுறையாக மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.4 அங்கீகரிக்கப்படாத கொடுப்பனவுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| ஆணைக்குழுவின் செயலாளருக்கு உள்ளபடியாக பதவிக்கு உரித்தான சம்பளம் மற்றும் படிகளுக்கு மேலதிகமாக இரட்டை படியாக 2021 ஆம் ஆண்டில் ரூபா 42,428 தொகையும், 2022 ஆம் ஆண்டில் ரூபா 353,455 தொகையும் ஆக கூட்டுமொத்தமாக ரூபா 395,883 செலுத்தப்பட்டிருந்த போதும் அந்த கொடுப்பனவுக்குரிய முறையான அங்கீகாரம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | நியமனம் கிடைத்த சகல செயலாளர்களுக்கும் சம்பளத்தில் ½ இல் இரட்டை படி செலுத்தப்பட்டுள்ளது. தற்போதைய செயலாளர் 2021 ஒக்டோபர் 29 ஆம் திகதி நியமனம் கிடைத்து வருகைதந்திருந்ததுடன் இந்த படி செலுத்துதல் தொடர்பாக சனாதிபதி அலுவலகத்திலிருந்து மேற்கொள்ளப்பட்ட விசாரணைக்கு பதிலாக உரிய படி செலுத்துவதற்குரிய இயலுமை காணப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | படிகளை செலுத்துவதற்காக முறையான அங்கீகாரம் பெறப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்தில் நாளதுவரையாக்கப்பட்ட நிறுவனத்தின் நிறுவகக் கட்டமைப்பு, அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர், தற்போது சேவையில் ஈடுபட்டுள்ள பதவியணியினர் தொடர்பான விபரங்கள் மற்றும் வருடாந்த செயற்பாடுகளுக்கான கட்டுநிதித் திட்டம் போன்ற தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் 2023 இற்காக தேவையான திருத்தங்களைச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும். |

**3.2 பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்படாமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 21 ஆவது நூற்றாண்டிற்கு பொருத்தமான கல்வி மறுசீரமைப்பை மேற்கொள்வதற்குரிய வேலைத் திட்டத்திற்காக 30 வருடங்கள் அளவிலான பழைய ஆணைக்குழுச் சட்டத்தை திருத்தி பாராளுமன்றத்திற்கு அங்கீகாரத்திற்கு சமர்ப்பிப்பதற்கு மீளாய்வாண்டின் ஏப்ரல் மாதம் அளவில் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் சட்டத்தில் பரிந்துரை செய்யப்பட்ட திருத்தங்கள் 2022 ஒக்டோபர் 05 ஆம் திகதி அமைச்சருக்கு சமர்ப்பித்தல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | ஆணைக்குழு சட்டத்தை திருத்தும் வகையில் தயாரிக்கப்பட்ட வரைவு கல்வி அமைச்சிற்கு அனுப்பப்பட்டுள்ளது. | திட்டமிட்ட பிரகாரம் சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஆ) இலங்கையில் விஞ்ஞானம், தொழில்நுட்பம், பொறியியல் விஞ்ஞானம், அழகியல், கணிதம் (STEAM) கல்வி தொடர்பாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கை ஆவணத்தை தயாரிப்பதற்கு மீளாய்வாண்டின் யூன் 30 ஆம் திகதி வரையிலும் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 2022 திசெம்பர் மாதத்தின் போது தேசிய கல்வி ஆணைக்குழுவினால் நடாத்தப்பட்ட கல்வி தொடர்பான முதலாவது இருதரப்பு தேசிய | 2022 ஆம் ஆண்டின் போது ஏற்பட்ட பல்வேறு இடையூறான நிலைமையின் கீழ் பணிகளை நிறைவேற்றுதல் தாமதமாகியிருந்த போதும் ஆராய்ச்சியின் இறுதி அறிக்கை தயாரிக்கப்படுகின்றது. | திட்டத்தில் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளை எதிர்பார்த்த பிரகாரம் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆராய்ச்சி மாநாட்டிற்கு ஆராய்ச்சிப் பத்திரம் ஒன்று மாத்திரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (இ) | 2022 ஆகஸ்ட் மாதம் வரையில் இலங்கையில் ஆசிரியர் தொழில்திறனுக்காக ஆசிரியர் கல்வி தொடர்பாக பரிந்துரைக்கப்பட்ட தேசிய உபாய வழிகள் கட்டமைப்பைத் தயாரிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் ஆண்டின் இறுதி வரையிலும் அந்தப் பணிகளுக்காக தரவுகள் சேகரித்தல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டின் போது ஏற்பட்ட பல்வேறு இடையூறான நிலைமைகளின் கீழ் பணிகளை நிறைவேற்றுதல் தாமதமாக இருந்த போதிலும் ஆராய்ச்சியின் இறுதி அறிக்கை தயாரிக்கப்படுகின்றது. | திட்டத்தில் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளை எதிர்பார்த்த பிரகாரம் நிறைவேற்றுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | முன்பள்ளி சிறுவர் அபிவிருத்தி நிலையத்திற்காக தேசிய கல்வி ஆணைக்குழுவின் மேற்பார்வை முறைமையொன்று ஸ்தாபிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பான ஆய்வறிக்கை ஆராய்ச்சி மாநாட்டில் சமர்ப்பித்தல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டின் போது ஏற்பட்ட பல்வேறு இடையூறான நிலைமைகளின் கீழ் பணிகளை நிறைவேற்றுதல் தாமதமாக இருந்த போதிலும் ஆராய்ச்சியின் இறுதி அறிக்கை தயாரிக்கப்படுகின்றது. மேற்பார்வை முறைமையொன்றை ஸ்தாபிக்கும் பணிகள் 2024 ஆம் ஆண்டின் போது மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | திட்டத்தில் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளை எதிர்பார்த்த காலத்தில் நிறைவேற்றுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (உ) | முன்பள்ளி பாடசாலைக் கல்வி, இரண்டாம் மற்றும் மூன்றாம், உயர், முறையற்ற, முதியோர், விஷேட, தொழில் ரீதியான மற்றும் சமய கல்வியினைப் பயிலுகின்ற மாணவர்களை உள்ளடக்கிக் கொள்ளல், | இலங்கையின் கல்வியின் பிரதான 08 துறைகளை வேவுகை செய்யும் வகையில் தயாரிக்கப்பட்ட தேசிய கல்விக் கொள்கையின் கட்டமைப்பு 2020-2030 கல்வி அமைச்சின் ஊடாக சனாதிபதிக்கு | எதிர்பார்க்கப்பட்ட பிரகாரம் நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக கல்விக் கொள்கை கட்டமைப்பில் பரிந்துரைகளை |

| | | |
|---|---|---|
| ஆசிரியர்களை ஆட்சேர்த்தல் மற்றும் தொழில் அபிவிருத்தி, கல்விக் கட்டமைப்பை அபிவிருத்தி செய்தல், மதிப்பீடு மற்றும் மீளாய்வு கல்வி வழங்கல் மற்றும் உதவி சேவைகள் போன்ற பல்வேறு துறைகள் தொடர்பாக தேசிய கல்வி ஆணைக்குழுவினால் 1992, 2003, 2016 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளின் போது சனாதிபதிக்கு பரிந்துரை சமர்ப்பிக்கப்பட்ட போதிலும் தற்போது வரையும் அமுல்படும் நிலையில் காணப்படவில்லை. | ஏற்றுக்கொள்வதற்காக அனுப்பப்பட்டுள்ளதுடன் சனாதிபதியின் ஆலோசனையின் பிரகாரம் அமைச்சரவை உப குழுவின் ஊடாக கல்வி கொள்கை ஒன்றைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | அமுல்படுத்துதல் வேண்டும். |

## 3.3 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்.

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முறைசாராக் கல்வி நிகழ்ச்சித் திட்டம் தொடர்பாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கை ஆவணங்கள் மற்றும் தற்போதைய நிகழ்ச்சித் திட்டத்தை தயாரிப்பதற்காக காணப்படுகின்ற பொறிமுறைகளை வலுப்படுத்துவதற்காக பரிந்துரைகளை சமர்ப்பித்தல் 2022 இன் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் அது மீண்டும் 2023 ஆம் ஆண்டில் உள்ளடக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றோம். | திட்டத்தின் பிரகாரம் செயற்படுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | பிரிவெனா மாணவர்களின் விரிவுரை மற்றும் வழிகாட்டி தேவைகள் தொடர்பான ஆராய்ச்சிகள், கண்டுபிடிப்புக்கள் 2022 இன் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் கல்விசார் நடவடிக்கைகளில் அதிக பழுவின் காரணமாக அது 2023 ஆம் ஆண்டில் உள்ளடக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றோம். | திட்டத்தின் பிரகாரம் செயற்படுவதற்கு முடியுமான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.4 அரசாங்க உத்தியோகத்தர்களின் பிணை வைத்தல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அரசாங்கத்தின் பணம் போன்றவற்றின் பொறுப்பில் உள்ளோர் மற்றும் பாதுகாப்பு தொடர்பாக நிதிப் பிரமாணம் 315 இன் ஏற்பாடுகளின் கீழ் ஆணைக்குழுவின் 04 உத்தியோகத்தர்களிடமிருந்து பிணை வைப்பை பெற்றுக்கொள்வதற்கு கணக்கீட்டு உத்தியோகத்தரால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தில் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | நிதிப் பிரமாணம் 880 இன் பிரகாரம் அரசாங்கத்தின் பண வருமானம் முத்திரை அல்லது பொருட்கள் போன்றவற்றுக்கு பொறுப்பாக இருப்பவர்கள், பொருட்களை வெளியாருக்கு விநியோகித்தல் தொடர்பான நிர்வாக ரீதியாக பொறுப்புடையவர்கள் அல்லது அதிகாரம் கையளிக்கப்பட்டதன் கீழ் அந்த நடவடிக்கைகள் கையளிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களும் அரசாங்கத்தின் கணக்குகளுக்குரிய உறுதிச் சீட்டுக்களை உறுதிப்படுத்துகின்ற, | நிதிப் பிரமாணம் 880 இன் பிரகாரம் எதிர்காலத்தில் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

காசோலையில் கையொப்பமிடுகின்றவர்களும் பிணைக் கட்டளைச் சட்டத்தின் 612 ஆவது அதிகாரத்தின் பிரகாரம் பிணை வைக்கவேண்டியிருந்த போதிலும் அந்த நடவடிக்கைகள் தொடர்பாக தேசிய கல்வி ஆணைக்குவின் உத்தியோகத்தர்கள் பிணை வைத்திருக்கவில்லை.

### 3.5 முகாமைத்துவ நலிவுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் நிறுவன பதவியணியினர் 30 ஆக இருக்கும் போது அலுவலகத்தை நடாத்திச் செல்வதற்காக பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபத்தில் 4748 சதுர அடிக்காக மீளாய்வாண்டில் கட்டிட வாடகையாக ரூபா 15,727,424 தொகையும், வாகன வசதிகள், சுகாதார வசதிகள் மற்றும் சுத்திகரிப்பு சேவைகள், மின்சாரம் மற்றும் நீர் பட்டியல்களுக்காக ரூபா 2,991,240 தொகையை உள்ளடக்கி மீளாய்வாண்டின் போது ரூபா 18,718,664 செலுத்தப்பட்டிருந்தது. | இந்த நிறுவனம் குறைந்த வாடகைச் செலவினத்துடன் வேறொரு பொருத்தமான இடத்தில் ஸ்தாபிக்கப்படும் வரை பண்டாநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் பெறப்பட்டுள்ள 4748 சதுர அடி அளவில் 1000 சதுர அடிக்கு அண்ணளவான அளவை மீளக் கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் அதன் பிரகாரம் 2023 ஆம் ஆண்டின் வாடகை உடன்படிக்கை திருத்தப்படுகின்றது. | நிறுவனத்தை நடாத்திச் செல்வதற்காக கட்டிடத்தை பெறும் போது சிக்கமானதாக நடவடிக்கை எடுப்பதை கண்காணித்தல் வேண்டும். |

## 4. நல்லாளுகை

### 4.1 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 41 ஆம் பிரிவிற்கு இணங்காத | தேசிய கல்விக் கொள்கை சட்டகம் 2020-2023 இன் அறிக்கை அதி மேதகு சனாதிபதிக்கு 2022 இன் போது | சட்டத்தின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ |

| | | |
|---|---|---|
| வகையில் ஆணைக்குழுவினால் மீளாய்வாண்டிற்குரிய கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு ஒரு கூட்டம் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது. | சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அதன் செயல் முன்னேற்றத்தை கலந்துரையாட வேண்டியிருந்தமை அத்தியாவசியமான பணியாக இருந்தமையால் 2022 இன் முதலாம் மற்றும் இரண்டாம் காலாண்டிற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம் நடாத்தாதிருப்பதற்கு குழு அங்கத்தவர்கள் தீர்மானித்திருந்தனர். | குழுக் கூட்டங்கள் நடாத்தப்படல் வேண்டும். |